# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி
# அசல் வழக்கு எண். 396/2012

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | சம்பத்குமார் | மதம் | .. | இந்து |
| தந்தை / கணவர் பெயர் | .. | சிதம்பரம் | தொழில் | .. | - |
| வயது | .. | 65 | ஜாதி | .. | செங்குந்த முதலியார் |
| கிராமம் | .. | அல்லிக்குட்டை | நாள் | .. | 15.09.2021 |
| வட்டம் | .. | சங்ககிரி | | | |

1872 ஆம் வருடத்திய சட்டம் 1ல் குறிப்பிட்ட விதிமுறையின்படி வாதி/ பிரதிவாதி தரப்பு சாட்சியான திரு. சம்பத்குமார் என்பவர், இந்நீதிமன்றத்தில் உதவியாளர் கிரேடு 3ஆக பணிபுரியும் திருமதி. கோகிலா என்பவரால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

வா.சா.1 – சம்பத்குமார் - குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி.

இந்த வழக்கை தாக்கல் செய்யும்பொழுது ஒரு வம்சாவழி பட்டியலை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வம்சாவழி பட்டியலில் இறந்துபோன இடும்ப முதலியாருக்கு இரு மனைவிகள் இருப்பதாகவோ, அந்த இரு மனைவிகளின் வாரிசுகளாக காட்டுவதற்கு எந்த குறிப்பும் இல்லை என்று சொன்னால், சரிதான். இடும்ப முதலியாருக்கு இரண்டு மனைவிகள் இருப்பதாக வாதுரையில் சொல்லவில்லை என்று சொன்னால், சரிதான். முதல்விசாரணையில் மேற்கண்ட விபரத்தை கூறியுள்ளீர்களா என்றால், இல்லை. இடும்ப முதலியாரின் முதல் மனைவியின் பெயர் தங்கம்மாள் என்றால், இல்லை, ரங்கம்மாள் (எ) ரங்கநாயகி. இந்த வழக்கு உரிய தரப்பினர்களை சேர்க்காமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 இன் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம் / சம்பத்குமார்

ஒப்பம் / திரு. ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.